ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1993/26 - 2016 නොවැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2016.11.18
1993/26 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. 9/2013

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

(460 அத்தியாயமான) காணி எடுத்தற் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (2) ஆம் உப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் காணி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

காணி அமைச்சர்.

கொழும்பு,
2016, நவெம்பர் 17.

ஒழுங்குவிதி

2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதிய 1977/8 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியினால் திருத்தப்பட்டவாறான, 2014 ஆம் ஆண்டு மே 30 ஆந் திகதிய 1864/54 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 2013 ஆம் ஆண்டின் காணி எடுத்தல் (நட்டஈடு செலுத்துதல்) ஒழுங்குவிதிகள், அவற்றின் 4 (2) ஆம் ஒழுங்குவிதியில் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-

(1) அதன் (ங) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்திக்கான இரண்டாம் காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன் மூலமும் :-

"ஆயின் மேலும், (ஞ) என்னும் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக சுயமீள் குடியமர்வுக்காக ஏற்புடையற்பாலதான பணக்கொடுப்பனவொன்று, 2 (2) ஆம் ஒழுங்குவிதியின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ) (ஓ), (ஔ), (க), (ங), (ச), (ஞ), (ட) மற்றும் (ண) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் கீழான மீள்குடியமர்த்தப்பட்டவர் ஒருவருக்கு, இந்தப் பந்தியின் கீழ் அத்தகைய மீள்குடியமர்த்தப்பட்டவர் உரித்துடையவராகவுள்ள காணித்துண்டொன்றுடன் சேர்த்து மேலதிகமாக, லார்க் குழுவின் தோதானதெனக் கருதினால், செய்யப்படலாம்."

(2) அதன் (ஞ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :-

"(iii) அ. 2 (2) ஆம் ஒழுங்குவிதியின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க), (ங), (ச), (ஞ), (ட) மற்றும் (ண) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் கீழ் பயனுறுத்தப்பட்ட ஏதேனும் சுய மீள்குடியமர்வுக்கான கொடுப்பனவு பின்வருமாறாதல் வேண்டும் :-

| | |
|---|---|
| மாநகர சபை இடப்பரப்புகள் | ரூபா 500,000 |
| நகரசபை இடப்பரப்புகளும்<br>தலைநகரிலும் முதலீட்டுச் சபை இடப்பரப்புகளிலும்<br>உள்ள பிரதேச சபை இடப்பரப்புகளும் | ரூபா 300,000 |
| பிரதேச சபை இடப்பரப்புகள் | ரூபா 150,000 |

ஆ. 2 (2) ஆம் ஒழுங்குவிதியின் (த) மற்றும் (ந) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் கீழ் பயனுறுத்தப்பட்ட ஏதேனும் சுய மீள்குடியமர்வுக்கான கொடுப்பனவு பின்வருமாறாதல் வேண்டும் :-

| | |
|---|---|
| மாநகர சபை இடப்பரப்புகள் | ரூபா 1000,000 |
| நகர சபை இடப்பரப்புகளும்<br>தலைநகரிலும் முதலீட்டுச் சபை இடப்பரப்புகளிலும்<br>உள்ள பிரதேச சபை இடப்பரப்புகளும். | ரூபா 750,000 |
| பிரதேச சபை இடப்பரப்புகள் | ரூபா 500,000.". |

12- 139

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.